**தலைப்பு 435 – கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிராமிய வீதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கிராமிய வீதிகள் மற்றும் எனைய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு 2020 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட அமைச்சாக இருந்ததால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவையொன்று காணப்படவில்லை. அதனால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரத்தொத்தாக வெளியிடுவதற்கு முடியாதிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்காக என்னால் எந்த ஒரு பரிந்துரையும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**2. நிதி மீளாய்வு**

**2.1 2020 ஆம் ஆண்டிற்கான செலவின அறிக்கையிடல்.**

2020 சனவரி மாதம் முதல் 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை முன்னாள் காணப்பட்ட அமைச்சின் 17 செலவின விடயங்களின் கீழ் செலவிடப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 1,802 மில்லியன் செலவின ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அமைச்சின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் 29 செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாடு வழங்கப்பட்ட ரூபா 6,203,026,000 தொகையில் இருந்து ரூபா 1,270,318,918 கூட்டுத்தொகையான 19 செலவின விடயங்களின் நிதி ஏற்பாடு 23 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அது மொத்த நிதி ஏற்பாட்டில் 20 சதவீதம் ஆகும். மேற்கூறப்பட்ட செலவின விடயங்களுக்கு இடையே நிதிப்பிரமாணம் 66 இன் மாற்றல்களையும் உள்ளடக்கி 50 சதவீதத்தை விஞ்சிய நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்ட 16 செலவின விடயங்கள் காணப்பட்டன. | கொரோனா தொற்று நோய் காணப்பட்ட நிலைமையினால் மீண்டெழும் செலவினங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை உச்ச அளவில் செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செலவின விடய இலக்கம் 2012 இற்காக குறைநிரப்பு மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடான ரூபா 3,350,000 தொகையில் இருந்து ரூபா 1,129,291 தொகை அதாவது 34 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | கொரோனா தொற்று நோய் நிலைமையினால் அநேகமான நிறுவனங்களில் உபகரணங்கள் பற்றாக்குறையாக காணப்பட்டமையால் இதனை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | -மேற்படி- |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| | **அவதானிப்புக்கள்** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 756(6) | 2020 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வு திகதியான 2020 ஏப்ரல் 08 ஆம் திகதி வரையிலும் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆம் திகதிய பீடீ/ஏஏ/எல்ஆர்/01/2021 ஆம் இலக்க தேசிய பாதீட்டு திணைக்களத்தின் கடிதம் | ஒதுக்கீட்டு சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஆகக்குறைந்த பெறுவனவுகளின் எல்லை ரூபா 1,000,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 200,000 ஆக திருத்தப்பட்டிருந்தது. எனினும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பண பீ கணக்கின் இணக்க கூற்றில் திருத்தப்பட்ட எல்லை உள்ளடக்கப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சின் திருத்தங்களை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டமையினால் ஒதுக்கீட்டு கணக்கில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்தது. | திருத்தப்பட்ட எல்லையினை உள்ளடக்கி நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்காக முற்பண கணக்குகள் தொடர்பான இணைக்கக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தனிப்பட்ட மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் செலவு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 219,703 ஆக இருந்த போதிலும் இணக்க கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 231,477 ஆனமையால் அந்த இரண்டு மீதிகளுக்கும் இடையே ரூபா 11,774 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தனிப்பட்ட மீதி பொழிப்பின் பிரகாரம் மீதி மற்றும் இணக்க கூற்றின் பிரகாரம் மீதிகள் சமமாக இருக்க வேண்டும். |

## 2.5 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் 3 ஆம் திகதியில் உள்ளவாறான ரூபா 812,157 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காணப்படுகின்ற சகல பொறுப்புக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சின் மூலம் அமுல்படுத்தப்பட்ட பாலங்களின் அபிவிருத்தி குறித்த செயற்திட்டத்தின் கீழ் 09 செயற்திட்டங்களுக்காக | ஏற்றுக்கொள்கின்றோம். | திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 17.97 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் 06 பால செயற்திட்டங்கள் மாத்திரம் ரூபா 5.53 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் 33 சதவீதம் முதல் 41 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிராமிய பாலங்கள் அபிவிருத்தியின் கீழ் 2020 ஆம் ஆண்டின் போது 12 மாவட்டங்களில் 53 செயற்திட்டங்களுக்காக ரூபா 813.52 மில்லியன் தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அதில் ரூபா 278.90 மில்லியன் அதாவது, 34 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 59 கிராமிய பால செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டு அதில் 36 பாலங்களின் நிர்மாண ஒப்பந்தங்கள் மாத்திரம் கையளிக்கப்பட்டிருந்தன. அதில் 13 செயற்திட்டங்களின் செயல் முன்னேற்றம் 50 சதவீத்திற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 நிதி விடுவிக்கப்பட்ட போதும் செயல்முன்னேற்றத்தை பெறாதிருந்த செயற்திட்டங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 100 பாலங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் அமைச்சின் மூலம் நேர் ஒப்பந்த முறையின் கீழ் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டு அதற்காக ரூபா 30 மில்லியன் முற்பணம் 2020 திசெம்பர் 31 இல் செலுத்தப்பட்ட போதிலும், 2021 மார்ச் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 11 பாலங்களின் வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்படுகின்றது. அதற்காக மொத்த முற்பணத் தொகையில் ரூபா 8 மில்லியன் அதாவது 27 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்தின் நிதிசார் செயல்முன்னேற்றம் 4.5 சதவீதம் ஆன கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | இந்த செயற்திட்டத்திற்காக பொது திறைசேரியில் இருந்து கோரப்பட்ட நிதி ஏற்பாடு கிடைக்காமையினால் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. 2021 இல் ஆரம்பிக்கப்பட்ட பாலங்களின் செயற்திட்டத்திற்காக அரச நிர்மாண மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகை ஈடுசெய்யப்பட்டுள்ளது. | ஒப்பந்த காலத்தில் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக கவனம் செலுத்துதல் வேண்டும். |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு இணங்கும் வகையில் அமைச்சின் மூலம் கிராமிய வீதிப் பிரிவிற்குரிய மூன்று நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்ட போதிலும், 2020 இன் இறுதி காலாண்டில் கிராமிய வீதி இராஜாங்க அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டதன் காரணமாக அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 இன் வருடாந்த வேலைத்திட்டம் தயாரிக்கும் போது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு உரிய படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சிக்காக 2021 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையும் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்தமையால், உள்ளக கணக்காய்வை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை கோரியிருந்த போதும் இது வரையிலும் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஏப்ரல் 27 ஆம் திகதி வரையும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டு அதில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட 50 பதவிகள் காணப்பட்டதுடன், அதில் முறையே சிரேஷ்ட நிலையில் 10 பதவிகளும், இரண்டாம் நிலையில் 10 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 07 பதவிகளும் வெற்றிடங்களாகக் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. | தேவையின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |